Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

விசுவாசம் என்பது அறிவல்ல, கிரியை.

கர்த்தருடைய வார்த்தையை அறிந்துகொள்ளாமல்,
கர்த்தரை நாம் கனப்படுத்த முடியாது.

கர்த்தருடைய வார்த்தையை
கனவீனப்படுத்துவது என்பது,
தீர்மானங்களை
எடுக்கும்போது
கர்த்தருடைய வார்த்தையை
கண்டுகொள்ளாமல்
இருப்பது.



Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue,
Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road,
Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

VOL . 3 ISSUE . 11 தனிப்பிரதி ரூ 20/= ஜூன் 2010



நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள
கேதுருவைப்போல் வளருவான். – சங்கீதம் 92:12

# நீதிமானுக்கு வரும் ஆசீர்வாதம்

- நிஜா கென்னடி

> நீதிமான் பனையைப் போல செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான்.
>
> - சங்கீதம் 92:12

நியாயமாக, நேர்மையாக நடப்பவர்கள் பனைமரத்தைப் போல செழித்து வாழ்வார்கள். பனைமரம்நீண்ட காலம் வாழும் தன்மையை உடையவை. தண்ணீர் வசதியில்லாத நிலத்தில்கூட ஆழமாக வேர்விட்டு வளரும். அது செழிப்பாகவும், வலுவுடனும், ஆரோக்கியத்துடனும் மேலாங்கி வளர்ந்து, ஆழமான வேரையுடையதால் நிலைத்து நிற்கும் ஆற்றலையும் உடையது. நீதிமான்களும் கர்த்தருக்குள் வேரூன்றி இருப்பதால், என்ன போராட்டங்கள் அவர்கள் வாழ்க்கையில் வந்தாலும் கர்த்தரை விட்டு விலகாமல், அசையாமல் உறுதியுடன் தொடர்ந்து நிலைத்திருப்பார்கள். பனைமரத்திலிருந்து பலவிதமான பயன்களை நாம் பெற்றுக் கொள்கிறோம். பனம்பழம் கிழக்குத் தேசத்தில் வாழும் ஜனங்களின் ஒரு முக்கியமான உணவு. பனக்கெட்டைகளை அரைத்து ஒட்டகங்களுககு உணவாக தருவார்கள். பனை ஓலைகளை கூடைகள் பின்னுவதற்கும் கூரை மேய்வதற்கும் பயன்படுத்துவார்கள். பனை மரத்திலிருந்து பதநீர் கிடைக்கிறது. கயிறு திரிக்கவும், கட்டிடம் கட்டுவதற்கும் விறகாக எரிப்பதற்கும் பயன்படும். பனைமரம் எப்படி உபயோகமுள்ளதாக, நற்பலன் அளிப்பதாக, ஆதாயமுள்ளதாக இருக்கிறதோ அதுபோல நீதிமான்களும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக, கனிகொடுக்கிறவர்களாக, பிரயோஜன முள்வர்களாக இருப்பார்கள்.

நீதிமான்கள் கேதுரு மரத்தைப்போல் இருப்பார்கள். கேதுரு மரம் நூற்றியிருபது அடிவரை உயரமாய் வளரும். அதன் தண்டுபகுதியின் சுற்றளவு முப்பது அடி வரையிலும் இருக்கும். நீண்ட காலமாக வாழும் தன்மையை உடையது. ஒரு சில கேதுரு மரங்கள் ஆயிரம் வருஷம் பழமையானது. கேதுரு மரம் ஸ்திரத்தன்மை, நீடிய வாழ்வு, கெம்பீரம் ஆகியவற்றைக் குறிக்கும். இம்மரம் கெட்டியாகவும், உறுதியாகவும், கனமானதாகவும், பலமானதாகவும் நீண்ட காலத்திற்கு பின்னும் தொடர்ந்து நீடித்திருக்கிறதாயும், நிலையானதாகவும், அசைக்க முடியாததாகவும் இருக்கும் நீதிமான்களும், நேர்மையாகவும், பொறுப்புணர்ச்சியுனும் இருப்பார்கள். சூழ்நிலைகள் சாதகமற்று இருந்தாலும் போராட்ட வேளைகளிலும் உறுதியாய் கர்த்தரில் நிலைத்திருப்பார்கள். நாமும் கர்த்தரை உறுதியாய் நம்பியிருக்கும்போது, அவரிடமிருந்து புதுபெலத்தையும், ஆற்றலையும், ஊக்கத்தையும், நல்ல குணநலன்களையும் பெற்றுக் கொண்டு அவரில் வளர்வோம்.



> அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்.
>
> - எரேமியா17:8

நீதிமான் கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்திருப்பதனால் ஆசீர்வதிக்கப்பட்ட வனாயிருப்பான். நீதிமானை தண்ணீர் கரையில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பிட்டு சொல்லியிருக்கிறது. தண்ணீர் எங்கேயிருக்கிறதோ அதை நோக்கி அந்த மரத்தின் வேர்கள் வளர்ந்து செல்லும். அதனால் கோடைகாலம் வரும்போது, அம்மரம் உலர்ந்து போவதில்லை. அதன் இலைகள் எப்போதும் பசுமையாக இருக்கும். மழை பெய்யாத ஆண்டுகளில் கூட தவறாமல் கனிகளைக் கொடுக்கும். அதுபோல நீதிமானின் வாழ்க்கையை கவனித்து பார்த்தோமென்றால், அவர்களுடைய வாழ்க்கை கனிகள் நிறைந்ததாயிருக்கும். அவர்கள் கர்த்தரையே நம்பி வாழ்வதால், அவர்களுடைய வாழ்க்கையில் துன்பங்கள், சோர்வுகள், நெருக்கங்கள் வரும்போதும், அவர்கள் ஜீவதண்ணீராகிய கர்த்தரில் வேரூன்றி நிலைநிற்பதால் அவர்களை ஒன்றும் அசைக்க முடியாது. அவர்கள் ஆத்துமா செழிப்புள்ளதாயிருக்கும். அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்படுவது மட்டுமல்லாமல், தேவையில் இருப்பவர்களின் தேவைகளை சந்திப்பவர்களாக இருப்பார்கள். தேவன்மேல் நம்பிக்கையில்லாமல், அவரை விட்டு விலகி, மனிதர்களை நம்பி வாழ்பவர்களின் வாழ்க்கை சபிக்கப் பட்டதாய் இருக்கும். ஆவிக்குரிய வளர்ச்சி இல்லாததால் மன உறுதி யில்லாமல், வளமற்று இருப்பார்கள்.

**ஜீவதண்ணீராகிய கர்த்தரில் வேரூன்றி நிலை நிற்பதால் அவர்களை ஒன்றும் அசைக்க முடியாது**



யோசேப்பு கர்த்தரோடு கூட நெருங்கி

வாழ்ந்ததால், கர்த்தர் அவனோடுகூட இருந்தார். அவன் செய்கிற எல்லா காரியத்தையும் கர்த்தர் வாய்க்கச் செய்தார். கர்த்தர் யோசேப்பின் நிமித்தம், அவன் வேலை செய்த எஜமானன் வீட்டையும் ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 39:5) எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஒரு சொப்பனத்தை கண்டான். யோசேப்போடு கர்த்தர் இருந்தபடியால் அவன் சொப்பனத்தின் அர்த்தத்தை விளக்கி எகிப்தில் வரப்போகும் செழிப்பான காலத்தையும், பஞ்சகாலத்தையும் குறித்து சொன்னான். செழிப்பு மற்றும் பஞ்ச காலத்தில் என்ன செய்யவேண்டும் என்ற ஆலோசனையை யோசேப்பு பார்வோனுக்கு கொடுத்தான். உடனே பார்வோன் அவனை எகிப்து தேசத்திற்கு அதிபதியாக உயர்த்தினான். யோசேப்பு, பஞ்ச காலத்தில் எகிப்து தேசத்திலுள்ள ஜனங்களுக்கு தானியத்தை கொடுத்தது மட்டுமல்லாமல், சுற்றியிருக்கும் தேசத்தில் உள்ள ஜனங்களும் அவனிடத்தில் தானியத்தை வாங்கிச் சென்றார்கள். யோசேப்பின் சகோதரர்கள் தானியத்தை வாங்க எகிப்திற்கு சென்றார்கள். யோசேப்பினால் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அவனை விரோதித்த அவனது சகோதரர்களும் அவனைத் தேடி வரும்படி கர்த்தர் செய்தார். தன் தகப்பனாரையும், தன் சகோதரரையும் பராமரித்து அவர்களுக்கு ஆசீர்வாதமாயிருந்தான். யோசேப்பின் தகப்பனார் மரணமடையப்போகும் நேரத்தில் யோசேப்பை இப்படியாக ஆசீர்வதித்தான்.

> **யோசேப்பு கனிதரும் செடி, அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின் மேல் படரும்.**
>
> **- ஆதியாகமம் 49:22**

யோசேப்பின் வாழ்க்கையில், அவனுடைய சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டு அடிமையைப் போல அவர்களால் விற்கப்பட்டான். பொய்யாய் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். நம்முடைய வாழ்க்கையிலும், நிந்தனைகள், அவமானங்கள், வீண் குற்றச்சாட்டுகள், இழப்புகள் வரலாம். நாம் யோசேப்பைப் போல கர்த்தரையே நோக்கிப் பார்க்க வேண்டும். அவரே நம்மை உயர்த்துகிறவர், பராமரிப்பவர், பாதுகாப்பு கொடுப்பவர், ஆறுதல் தருபவர், ஆதரிப்பவர், சுகம் கொடுப்பவர், அவரை நம்பி நாம் வாழவேண்டும்.

> **நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.**
>
> **- சங்கீதம் 34:19**

வேதனைகளின் மத்தியிலும், கர்த்தர் நம்மை விடுவிப்பார் என்று விசுவாசத்தோடு, அவரை துதிக்க கற்று கொள்ள வேண்டும். கஷ்டங்களைப் பார்த்து நாம் ஒருபோதும் சோர்ந்து போகக் கூடாது. கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு அவரே உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் என்று சங்கீதம் 55:22 கூறுகிறது. கர்த்தர்மேல் நம் பாரங்களை வைத்துவிட கர்த்தரே கூறியிருக்கிறார். அதனால் நம் பாரங்களை அவர் மேல்



வைத்து விடும்போது, நம்முடைய காரியங்களை கர்த்தரே பார்த்துக் கொள்வார். நாம் அவர் மேல் பாரங்களை வைத்துவிடும்போதுதான் அவர் நமக்காக எல்லாவற்றையும் செய்ய முடியும். நாமே நம் பாரங்களை சுமந்து கொண்டு கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் கர்த்தர் நமக்காக ஒன்றும் செய்ய முடியாது. நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் என்று வாக்கு கொடுத்திருக்கிறார். ஆதலால் கர்த்தர் சொன்ன வாக்கை நிச்சயம் நிறைவேற்றுவார். இந்த வாக்கை நம்பி நாம் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும். என்ன பிரச்சனைகள் வந்தாலும் அவர் நமக்கு ஆதரவாயிருப்பார். தாவீதோடு கூட இருந்து ஆதரவாயிருந்தவர் நமக்கும் ஆதரவாயிருப்பார்.

நதிக்கரையில் உள்ள தோட்டங்கள் எப்படி பச்சைபசேலென்று செழிப்பாய் இருக்கிறதோ, அப்படிப்போல நீதிமான்களுடைய வாழ்க்கையும், குடும்பமும் செழிப்பாய் இருக்கும். அவனுடைய மனைவியும், பிள்ளைகளும் நற்குணம் வீசுகிறவர்களாக இருப்பார்கள். தேவனை பின்பற்றி வாழ்பவர்களின் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக சமாதானமுள்ளதாக இருக்கும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை படித்து, அதன்படி நடப்பதால் ஒருவருக்கொருவர் அன்பாகவும், உதவியாகவும், உண்மையாகவும், ஒற்றுமையாகவும் இருப்பார்கள். ஒருவரோடொருவர் உறவு முறையில் நிலைத்திருக்க வேண்டுமானால் வேதவார்த்தையை படித்து அதன்படி நடப்பது அவசியம். கர்த்தருக்கு பயப்படுகிறவனுடைய மனைவி கனிதரும் திராட்சைச் செடியைப் போல இருப்பாள். நற்குணசாலியாக சாந்தமுள்ளவளாக, ஞானமுள்ளவளாக, பலன் கொடுக்கிறவளாக இருப்பாள். பிள்ளைகள் ஒலிவ மரக்கன்றுகளைப் போல கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். கர்த்தருக்கு பயந்து அவருக்குரிய கனத்தை கொடுத்து, அவரை முழுமனத்தோடும், முழு ஆத்துமாவோடும், பயபக்தியோடு ஆராதித்து, அவருக்கு நன்றி சொல்லி, அவரை நேசித்து அவருடைய வழிகளில் நடந்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, அவரை சார்ந்து, அவர் விரும்புகிறபடி வாழ்பவர்களின் வாழ்க்கை, மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படுமளவிற்கு கர்த்தரால் ஆசீர்வதிக்கப் பட்டதாயிருக்கும்.

நீதிமான்கள் கர்த்தருடைய போதனைகளை நேசித்து, இரவும், பகலும் அதை தியானிக்கிறவர்களாயிருப்பார்கள். தீயகாரியங்களைச் செய்யும் ஜனங்களின் அறிவுரைகளை கேட்காமல், அவர்களைப் போல வாழாமல் இருப்பதால் சந்தோஷத்தோடு சமாதானத்தோடு வாழ்வார்கள். போதனைகளை கேட்கிறவர்களாய் மட்டுமல்ல அதன்படி நடக்கிறவர்களாக இருப்பார்கள். வார்த்தையை தொடர்ந்து படித்து, அதன்படி நடக்கிறவர்கள் உண்மையிலே ஆசீர்வதிக்கப் பட்டவர்களாயிருப் பார்கள். நாவடக்கம் உள்ளவர்களாகவும், தேவையோடு இருப்பவர் களின் தேவைகளை சந்திப்பவர்களாகவும், மற்றவர்களுக்கு நன்மை செய்கிறவர்களாகவும், உலகத்தின் பாவங்களில் விழாமல்

> **தேவையோடு இருப்பவர்களின் தேவைகளை சந்திப்பவர்களாக**

கறைபடாதபடிக்கு தங்களை காத்துக் கொண்டு, கர்த்தரையே விசுவாசித்து வாழ்வார்கள்.

மரம் நன்கு கனி கொடுக்க வேண்டுமானால் அதை நாம் நன்கு பராமரிக்க வேண்டும். நாமும் ஆவிக்குரிய வளர்ச்சியில் முன்னேற வேண்டுமானால், வேதவார்த்தையைப் படித்து தியானித்து, அவரோடு பேசி, ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொண்டு அவரில் நிலைத்திருக்க வேண்டும். அப்பொழுது ஏற்ற காலத்தில் பலன் கொடுக்கிறவர்களாக மாறுவோம். நாம் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்போது, அவரே நம்மை பராமரித்து ஆசீர்வதித்து, கனி கொடுக்கிறவர்களாக உருவாக்குவார். வேததியானத்தின் மூலமாகவும், ஜெபத்தின் மூலமாகவும் தொடர்ந்து கர்த்தருடைய பிரசன்னத்தில் இருக்கலாம். நாம் அவரில் நிலைத்திருந்தால், அவியின் கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் நம்மிலிருந்து வெளிப்படும். நாம் மிகுந்த கனி கொடுப்பதனால், நம்மை உண்டாக்கின பிதாவின் நாமம் மகிமைப்படும். இலையுதிராதிருக்கிற மரம் செழிப்பான ஆவிக்குரிய ஜீவியத்தையும், கனிதரும் வாழ்க்கையையும் குறிக்கிறது (சங்கீதம் *1:3*). நீதிமான்களின் குடும்பத்தையும், அவர்கள் செய்யும் வேலையையும், வியாபாரத்தையும், ஊழியத்தையும் இன்னும் அவர்கள் செய்வதெல்லாம் வாய்க்கும். அவர்களுடைய கரத்தின் கிரியைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பார். நீதிமான்கள் முதிர்வயதிலும் கனிதந்து புஷ்டியும், பசுமையுமாய் இருப்பார்கள் (சங்கீதம் *92:15*). வயது அவர்களுக்கு ஒரு தடையாக இருக்காது. வயதாவதால் வரக்கூடிய பெலவீனம், இயலாமை, மற்றவர்களுடைய உதவிக்காக எப்போதும் அவர்களை சார்ந்திருத்தல் இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் அவர்களில் இல்லாதபடி கர்த்தர் அவர்களுக்கு பெலன் தருவார். முதிர்வயதிலும் ஆரோக்கியமாக இருக்கக்கூடிய கிருபையை கர்த்தர் தருவார். அவர்கள் எப்போதும ஜெபித்து காரியங்களைச் செய்வார்கள். ஒவ்வொரு காரியத்தைச் செய்யும்போது, தங்கள் சுயபுத்தியையோ, சுய பலத்தையோ நம்பாமல், கர்த்தரையே சார்ந்து இருப்பார்கள். அதனால் கர்த்தர் அவர்கள் செய்யும் எல்லா காரியங்களையும் வாய்க்கச் செய்வார்.

> நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.

- ஆதியாகமம் 6:9

நோவா நீதிமானாயிருந்ததினாலே பெருவெள்ளத்தின் அழிவிலிருந்து கர்த்தரால் காப்பாற்றப்பட்டான். கர்த்தர் நோவாவிடம் ஒரு பேழையைச் செய்யச் சொன்னார். உடனே அவன் கீழ்ப்படிந்து கர்த்தர் சொன்னபடியே பேழையைச் செய்தான். மற்ற மனிதர்களுக்கு அழிவைக் குறித்து எச்சரிக்கை கொடுத்தான். ஆனால் ஜனங்களோ அவன் சொல்லைக் கேளாமல் பரியாசம் பண்ணினார்கள். வெள்ளம் வந்தபோது, நோவாவும் அவன் குடும்பத்தாரும், மிருகங்களும், பறவைகளும் மற்ற ஜீவ ஜந்துக்களும் கர்த்தரால் பேழைக்குள் வைத்து



காப்பாற்றப்பட்டார்கள். நோவா நீதிமானாய் இருந்ததினால் அதன் பலனை கர்த்தரிடமிருந்து பெற்றான்.



யோசேப்பு தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழ்ந்தான். கர்த்தர் தன்னை காண்கிறார் என்ற உணர்வோடுகூட வாழ்ந்தான். போத்திபாரின் மனைவி தன்னை பாவம் செய்ய அழைத்தபோது, பாவத்தை வெறுத்து, என் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி என்று சொல்லி, அந்த இடத்தை விட்டே ஓடிப்போனான். நம்முடைய வாழ்க்கையில் பாவம் செய்கிற சூழ்நிலை வந்தால் யோசேப்பை நினைத்து, பாவம் தேவனுக்கு விரோதமான செயல், நியாயதீர்ப்பு நாளில் கர்த்தருக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கூட நடந்து கொள்ள வேண்டும். மனிதர்களிடம் பொய் சொல்லி ஏமாற்றினாலும், கர்த்தரை யாரும் ஏமாற்ற முடியாது. பாவத்தை செய்து விட்டு கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டு விடலாம் என்ற எண்ணத்தை விட்டுவிடுவோம். நாம் செய்த பாவத்தை அறிக்கை செய்தால், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு மன்னிப்பை பெற்றுக் கொள்வோம். ஆனால், நாம் செய்த பாவத்திற்கு நிச்சயமாக தண்டனை உண்டு. நீதிமானுக்கு பூமியில் சரிகட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம் (நீதிமொழிகள் *11:31*) யோசேப்பைப் போல பரிசுத்தமாக நம்மை பாதுகாத்து, தண்டனைக்கு தப்புவித்துக் கொள்வோம்.

## நீதிமானும், துன்மார்க்கனும்

தாவீது கர்த்தரோடுகூட மிகவும் நெருக்கமாக இருந்தபடியால், இப்படியாகக் கூறுகிறான்:

> நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்.

- சங்கீதம் 52:8

தாவீது ஒலிவ மரத்துக்கு தன்னை ஒப்பிட்டு கூறுகிறான். ஒலிவ மரம் செழிப்பானது மட்டுமல்ல, நீண்ட நாட்கள் வாழக்கூடியது. இம்மரம் எப்படி ஆரோக்கியமாக, செழிப்பாக பச்சைபசேலென்று இருக்கிறதோ, அதுபோல, அவன் இருப்பதாக கூறுகிறான். ஏனென்றால் அவன் கர்த்தருடைய மாறாக அன்பையும், இரக்கத்தையும், கிருபையையும் என்றென்றைக்கும் நம்பியிருந்தான். அதனால்தான் அவன் ஒலிவ மரத்தைப் போல் இருப்பதாகக் கூறுகிறான்.

தாவீது கர்த்தரை நம்பியிருக்கிற பிள்ளைகளுக்கும், பொல்லாத ஜனங்களுக்கும் உள்ள வேறுபாட்டை விவரித்துக் கூறுகிறான். கர்த்தரை நம்பியிருக்கிறவர்களுக்கும், கர்த்தரை நம்பாமல் தன் செல்வத்தை நம்புகிறவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை தன் வாழ்க்கையின் அனுபவத்தால் கூறுகிறான். தாவீதை கொன்று போடும்படி, சவுல் முயற்சி செய்தபோது, தாவீது சவுலிடமிருந்து தப்பித்து ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்தில் சென்றான். தாவீது அகிமெலேக்கின் வீட்டில் வந்தானென்று தோவேக்கு என்பவன் சவுலுக்கு அறிவித்தான். அப்பொழுது சவுல் அகிமெலேக்குவையும், அவன் வீட்டாரையும் கொல்லும்படி சேவகருக்கு கட்டளையிட்டான். ஆனால், சேவகர் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்ல மறுத்தனர். சவுல், தோவேக்கிடம் ஆசாரியர்களை கொன்று போட சொன்னான். தோவேக்கு எண்பத்தைந்து ஆசாரியர்களை கொன்று போட்டான். பாருங்கள் பிரியமானவர்களே, தோவேக்கு தாவீதையும், அகிமெலேக்கையும் காட்டிக் கொடுத்து நாவினால் பாவம் செய்தது மட்டுமல்லாமல், கர்த்தருடைய



ஆசாரியர்களையும் கொன்று போட்டான். நல்லவர்களை கொன்று போட்டு துன்மார்க்காய் மாறினான். தீமை செய்வதற்கு உதவியாய் இருந்தான். ஆனால், தாவீதோ சவுல் தன்னை கொலை செய்ய முயற்சி செய்தபோது, சவுலைக் கொல்ல நினைக்காமல் பாவத்திற்கு விலகியிருந்தான். தோவேக்கு தாவீதையும், ஆசாரியனையும் காட்டிக் கொடுத்தால் சவுலிடமிருந்து வெகுமதி கிடைக்கும். இன்னும் ஐசுவரியவானாகலாம் என்று நினைத்து, தன் ஐசுவரியத்தை நம்பி, வெளியே எறியப்பட்ட பட்ட மரத்தைப்போல சபிக்கப்பட்டவனாய் அழிந்து போனான். தோவேக்கின் மீது கர்த்தருடைய நியாயத் தீர்ப்பு வந்தது. ஆனால், தாவீதோ துயரமான நேரத்திலும், கர்த்தரை தன்பெலனாக எண்ணி, அவரையே நம்பி பச்சை மரத்தைப் போல நீடிய நாட்களாய் வாழ்ந்தான். தேவனுடைய உதவிக்காக, காத்திருந்து, அவருடைய சமுகத்தில் துதித்துக் கொண்டிருந்த தாவீது ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருந்தான்.

## இயேசுகிறிஸ்துவின் இரத்தம்

பாவம் செய்யாமல் நல்லவர்களாக வாழுகிறவர்ளை நீதிமான்கள் என்று கூறுகிறார்கள். வேதம் என்ன கூறுகிறது என்றால், தேவன் ஒருவரைத் தவிர நல்லவன் ஒருவனும் இல்லை. (ரோமர் *3:10-12*). பாவம் செய்யாமல் இருந்தால், நீதிமானாகிட முடியாது. யூதர்கள், நியாயப்பிரமாணத்தின் கற்பனைகளின்படி நடந்தால், நீதிமானாகிவிடலாம் என்று நினைத்து, அதன்படி நடக்க முயற்சித்தார்கள். நியாயப்பிரமாணத்தின்படி நடந்தாலும், நீதிமானாகிவிட முடியாது. சிலர் பல நல்ல காரியங்களை சமுதாயத்திற்கும், ஏழை ஏளிய ஜனங்களுக்கும் செய்வதாலும், தான தருமங்கள் செய்வதாலும், மற்றவர்களுக்கு



நன்மை செய்வதாலும், நீதிமான்களாகிவிடலாம் என்று நினைக்கிறார்கள். சிலர் பல புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்றால், தாங்கள் செய்த பாவங்கள் போய்விடும் என்றும், இன்னும் சிலர் தங்களை தாங்களே வருத்திக் கொண்டாலோ, காயப்படுத்திக் கொண்டாலோ, தாங்கள் செய்த பாவம் போய்விடும் என்றும், நிறைய காணிக்கை கொடுத்தால், தாங்கள் செய்த பாவம் நிவிர்த்தியாகிவிடும் என்று நினைக்கிறார்கள். யாரெல்லாம் தான் செய்த பாவங்களை தேவனிடத்தில் அறிக்கை செய்து, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கப்பட்டார்களோ, அவர்களே நீதிமான்கள். இயேசு கிறிஸ்துவுன் இரத்தத்தினால் கழுவப்படாமல் யாரும் நீதிமான்கள் ஆக முடியாது.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். நாம் செய்த பாவங்களை உணர்ந்து, அதை தேவனிடத்தில் சொல்லி மன்னிப்பு கேட்கும்போது, தேவன் நம் பாவங்களை மன்னித்து நம்மை பரிசுத்தமாக்கிவிடுகிறார். நமது பாவங்கள் மட்டுமல்ல, உலகத்தின் எல்லா மக்களின் பாவங்கள் நீக்கப்பட வேண்டுமானால் இயேசு கிறிஸ்துவே வழி. அவராலே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம்.. உலகத்தில் உள்ள எந்த மனுஷனும் நீதிமானாவதற்கு ஒரே வழி இயேசு கிறிஸ்துவின் இரத்தமே.

## மனுஷ நீதி

சுய நீதியையுடைய ஒரு மனிதன், பேருக்கு கிறிஸ்தவனாக வாழ்ந்து வந்தான். அவன் அரசாங்கத்தில் மிகவும் உயர்ந்த பதவியில் இருந்ததால், பல நிறுவனங்களுக்கும், சமுதாயத்திற்கும், தனி மனிதனுக்கும் சேவைகள் செய்தான். பல நன்மைகளையும், நல்ல காரியங்களையும், உதவிகளையும் மற்றவர்களுக்கு



செய்தான். அதனால் பலர் அவனை மிகவும் நல்லவன் என்றும், நியாயமுள்ள, உண்மையுள்ள மனுஷன் என்றும் புகழ்ந்து பேசினார்கள். ஆனால், அந்த மனிதன் தேவனுடைய பார்வையில் நீதிமானாகக் காணப்படவில்லை. தன்னுடைய சுயபுத்தியினாலும், சுய ஞானத்தினாலும், பிறருக்கு ஆலோசனை சொன்னானேயொழிய தேவனுடைய ஆலோசனையை கேட்டு, அவர் விரும்பியபடி காரியங்களைச் செய்யாமல், தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதன்படி எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற எண்ணமில்லாமல் இருந்தான். வேதம், அவனது வாழ்க்கையில் இல்லை. தேவனை அவனது வாழ்க்கையின் முதலிடத்தில் வைக்கவில்லை. அவனுடைய (மனித) ஞானமே அவனது வாழ்க்கையில் பிரதானமான இடத்தில் இருந்தது. இயேசு கிறிஸ்துவை அறிந்திருந்தும், அவருக்கு அவனுடைய வாழ்க்கையில் இடமில்லை. ஏனென்றால் அவன் இயேசு கிறிஸ்துவின்

இரத்தத்தினால் கழுவப்படவில்லை. மனுஷனுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. (ஏசாயா 64:6). நாம் நீதி என்று நினைப்பவைகள் கர்த்தருடைய பார்வையில் அழுக்கான கந்தை போன்றவைகள். நம்மை நாமே நீதிமான்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. தேவனுக்கு முன்பாக தாழ்மையோடு நடந்து கொள்ளவேண்டும்.

சிலர் தங்களை நல்லவர்களாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பிறரைக் காட்டிலும், அவர்கள் மிகவும் நல்லவர்களாகவும், மற்றவர்களை அற்பமாகவும் எண்ணுகிறார்கள்.

> **தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக் குறித்து; அவர் (இயேசு கிறிஸ்து) ஒரு உவமையைச் சொன்னார்.**
>
> - லூக்கா 18:9

பரிசேயனும், வரி வசூலிப்பவனும் ஜெப ஆலயத்திற்கு ஜெபம் பண்ணும்படி சென்றார்கள். பரிசேயன் தனியாக நின்று கொண்டு, தேவனே நான் தீய மக்களைப் போல பாவ காரியங்களை செய்யாததினால் உமக்கு நன்றி என்றும், திருடுபவர்கள், ஏமாற்றுகிறவர்கள், விபச்சாரக்காரர்கள் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், வரி வசூலிப்பவனைப் போலவும் இல்லாததினால் உமக்கு நன்றி என்று சொல்லி, வாரத்தில் இரண்டு முறை உபவாசம் இருப்பதாகவும், வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை தசமபாகம் கொடுப்பதாகவும் தனக்குள்ளே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். வரி வசூலிப்பவன் தூரத்தில் நின்று, தான் ஒரு பாவி என்பதை உணர்ந்து தேவனுடைய கிருபை தனக்கு வேண்டும் என்று ஜெபித்தான். பரிசேயன் மற்றவர்கள் தன்னை புகழ வேண்டும், மதிக்க வேண்டும் என்றும், மற்றவர்களைக் காட்டிலும் தான் நல்லவன் என்றும், வரி வசூலிப்பவனை அற்பமாகவும் எண்ணினான். சுயநீதியை உடையவனாக இருந்தான். சுயநீதி பெருமையையும், வெறுப்பையும் கொண்டு



வரும். கர்த்தரிடமிருந்து கற்றுக் கொள்ள தடையாயிருக்கும். நம்முடைய சாதனைகளை உழைப்பை, நம் திறமையை நினைத்து நாம் பெருமை கொண்டால், அது தேவனிடமிருந்து நம்மை பிரித்துவிடும். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கு அவர் கிருபை அளிக்கிறார். வரிவசூலிப்பவன் தாழ்மையோடு கூட தேவனுடைய இரக்கம் தனக்கு வேண்டும் என்று ஜெபித்தான். தேவனுடைய பார்வையில் இவனே நீதிமானாக்கப்பட்டவனாய் திரும்பிச் சென்றான்.பிரியமானவர்களே, யாரையும் அற்பமாக எண்ணாதேயுங்கள். எல்லோரையும் கர்த்தருடைய



பிள்ளைகளாக, கர்த்தர் பார்க்கிறவிதத்தில் பார்க்க கற்றுக் கொள்ளுங்கள். கர்த்தர் உண்டாக்கின அவருடைய பிள்ளைகளை அற்பமாக எண்ணக்கூடாது. இயேசு கிறிஸ்து பரிசேயனிடம், நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார் என்று கூறினார். பரிசேயர்கள் மற்றவர்கள் தங்களை புகழ வேண்டும் என்பதற்காக பக்தியுள்ளவர்கள் போல நடித்தார்கள், கர்த்தர் இந்த காரியத்தை அருவருக்கிறார் (லூக்கா 16:15). அவர்கள் இருதயத்தில் என்ன நினைவுகளோடு இருக்கிறார்கள் என்பதை இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார்.

பலியிடுவதைக் காட்டிலும் நீதியும் நியாயமும் சொல்வதே கர்த்தருக்குப் பிரியமானதால், அப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழ கர்த்தர் கிருபை செய்வாராக! கர்த்தருடைய பார்வையில் நாம் நீதிமானாய் வாழ்வோமாக! ஆமென்.

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

**உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com** இணைய தளம் : **www.kennedyministries.org**



# வார்த்தை

**- க்ரஃலோ டாலர்**

www.creflodollarministries.org

1. உங்களது மனது, பிரமானதான ஆக்கப்பூர்வ ஆற்றலைக் கொண்டுள்ளது. அதனால்தான், தேவன் உங்களுக்கு கற்பனைத் திறனை கொடுத்திருக்கிறார். அந்தக் கற்பனைத் திறனைக்கொண்டு மனத் திரையில் படங்களையும், அதின்மேல் நம்பிக்கையையும், அவைகள் உங்கள் வாழ்க்கையில் நடப்பதையும் காண்கிறீர்கள். ஒரு தடவை உங்கள் மனத்திரையில் தோன்றியதை நிறைவேற்ற நீங்கள் விரும்பினால், நிச்சயமாக அது நடந்தேறும். எதை நீங்கள் மனதிலே தியானிக்கிறீர்களோ, அது உங்களது எதிர்காலத்திற்கான வரைபடமாகும். கர்த்தருடைய வார்த்தையை ஒட்டி நம் சிந்தனை இருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தை நமது சிந்தனையை நல்வழிப்படுத்தும். இது ஒரு நாளில் நடக்கக்கூடியக் காரியமல்ல. ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடக்க வேண்டிய காரியம்.

2. சந்தோஷமில்லாமல் இருப்பது என்பது, நம்முடைய கண்களுக்கு முன்பாக வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது அல்ல. அது எப்படி இருக்க வேண்டும் என்று விருப்பப்படுகிறோமோ அதற்கும், இப்போது இருக்கும் வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசமே.

3. விசுவாசம் என்பது அறிவல்ல, கிரியை.

4. நாம் யாரென்பது கர்த்தர் தந்த பரிசு. நாம் எப்படியாக இருக்கப் போகிறோம் என்பது கர்த்தருக்கு நாம் தரும் பரிசு.

5. கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதற்கு, முதலாவது உங்களுக்குள் கர்த்தர் என்னுடன் பேசுவார் என்ற எதிர்பார்ப்பு வேண்டும். எதிர்பார்ப்புதான் அற்புதங்களைக் காணச் செய்யும். நோவாவுடன் குறிப்பாக பேழையைக் குறித்துப் பேசினார். ஆவியில் நிரம்பி ஜெபிக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையைத் தியானிப்பதிலும், ஜெபத்திலும் நேரம் செலவழிக்க வேண்டும். கர்த்தர் வெளிப்பாடுகளைத் தருவார். முதலாவதும், பிரதானமானதும் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதற்கு, அவரை நாம் நேசிக்கவேண்டும்.

6. கர்த்தர் நமக்கு சோதனைகளை அனுமதிப்பது, நாம் நமக்கு நியமிக்கப்பட்டுள்ள வாழ்க்கையை விட்டு விலகிச் செல்லாமல் இருப்பதற்காகவே. நமக்கு சோதனைகள் ஏற்பட்டாலும், கர்த்தர் அவற்றிலிருந்து நம்மை விடுவிக்கிறார். கர்த்தர் நம்மை சிட்சிப்பது, நீண்ட நம் வாழ்க்கைக்கு பயனுள்ளதாகும்.

7. கர்த்தருடைய வார்த்தையை அறிந்து கொள்ளாமல், கர்த்தரை நாம் கனப்படுத்த முடியாது.

8. கர்த்தருடைய வார்த்தையை கனவீனப்படுத்துவது என்பது, தீர்மானங்களை எடுக்கும்போது கர்த்தருடைய வார்த்தையை கண்டுகொள்ளாமல் இருப்பது.

9. தசமபாகத்தை நாம் இரண்டு விதத்தில் கர்த்தருக்குக் கொடுக்கலாம். ஒன்று, கட்டளையின்படி கொடுப்பது. இரண்டாவது, அவர் மீதுள்ள அன்பினால் கொடுப்பது. அன்பு என்பது கட்டளை நிறைவேறுவதாகும். தசம பாகம் கொடுப்பது என்பது நாம் அவரை நேசிப்பதற்கும், அவர் நமக்குக் கொடுத்துள்ளவற்றிற்கு நன்றி செலுத்துவதுமாகும். தசமபாகம் கொடுக்கும்போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறார்.



10. கர்த்தரை நாம் நேசிப்பதின் நோக்கமே, நம் வாழ்வின் வெற்றியை நிர்ணயிக்கிறது. கர்த்தருக்கு சேவை செய்வதை பாரமாக நினைத்தோமானால், ஆசீர்வாதத்தைப் பெற நினைக்கக்கூடாது. அவரது வல்லமை நம்முடைய நுகத்தடிகளையும், தடைகளையும் உடைக்கத் தேவை. உங்களுக்கு எதிராய் சூழ்நிலைகள் இருக்கும்போதும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். நன்றி செலுத்த உங்களை தயார்படுத்துங்கள். முறுமுறுப்பதை நிறுத்துங்கள். உங்களது நன்றியுள்ள இருதயமே உங்களது ஆசீர்வாதத்தின் அறுவடையை நிர்ணயிக்கிறது. கர்த்தருக்கு நாம் எதைச் செய்தாலும், மதம் சார்ந்த சடங்காரச்சாரமாக செய்யாமல் அன்பினால் செய்ய வேண்டும்.

11. கர்த்தருடைய வார்த்தை எப்போதுமே கிரியை செய்யும். அப்படி இல்லையென்றால் உங்களது இருதயத்தின் நோக்கங்களை சரிபாருங்கள்.

12. மற்றவர்கள் மீது எவ்வளவு அன்பாக இருக்கிறோம் என்பதே, கர்த்தர்மேல் நாம் வைத்துள்ள அன்பின் அடையாளம்.

13. ஜெபத்திற்கு பதில் கிடைப்பது என்பது இன்று ஜனங்களுக்குத் தெரியாத காரியமாகிவிட்டது. ஜெபத்தின் எளிமை இன்று காணாமல் போய்விட்டது. ஜெபம் என்பது சடங்காச்சாரமானதொரு காரியமாகிவிட்டது. ஜெபத்திலே வல்லமை இல்லாமல் போய்விட்டது. ஜெபம் என்பது பக்தியாய் இருப்பதின் அடையாளம் அல்ல. ஜெபம் என்பது பாரமான காரியமல்ல. ஜெபம், கர்த்தர் தந்த பரிசு. அதை சரியாகப் பயன்படுத்தினால் நம் வாழ்க்கையில் மிகப்பெரிய வெற்றியைப் பெறலாம். ஜெபத்திலே நாம் விட்டுவிட்டது - தைரியம். இது ஏனென்றால் கர்த்தருடைய சித்தத்தை நாம் அறியாமல் இருப்பதே. கர்த்தர் சித்தம் என்பது, கர்த்தர் நம் வாழ்வில் நடத்த விரும்புவதாகும். அவருடைய வேதமும், அவருடைய பிரசன்னமுமே நாம் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்ளும் இரண்டு வழிகளாகும். நாம் ஜெபிக்கும்போது கர்த்தருடைய வேதத்தின் வார்த்தையை அடிப்படையாக வைத்து ஜெபிக்க வேண்டும். இந்த ஜெபத்தையே கர்த்தர் கேட்பார். அவருடைய வார்த்தையை வைத்து ஜெபிக்கிறோமென்றால், அதுவே அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் ஜெபமாகும். ஜெபத்தின் அழகு அதன் எளிமையாகும். கர்த்தர் ஏற்கனவே அவருடைய வார்த்தையில் சொல்லியிருப்பதை அவரிடம் சொல்லுவதே ஜெபமாகும். வேதாகமத்தில் நம்முடைய வாழ்வின் எல்லா பிரச்சினைகளும் உள்ளது. நம்முடைய செலவுகளைக் குறித்து, திருமண காரியங்கள் குறித்து, நம்முடைய பிள்ளைகளைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது என்று நாம் கற்றுக் கொள்ளலாம். அதின்படி நாம் செய்வோமானால், நமது ஜெபம் வல்லமையுள்ளதாகும். உடனே சூழ்நிலை மாறவில்லையென்றால் ஜெபத்தை நாம் நிறுத்திவிடக்கூடாது. கர்த்தர், என்னை நேசிக்கிறார் என்ற மனதையுடையவர்களே வல்லமையான ஜெபத்தை ஏறெடுக்க முடியும்.

14. கர்த்தருடைய சித்தத்தை அறிந்து, அதின்படி வாழும்போதே நாம் வாழ்வின் முழுமையை அடையலாம். சில காரியங்கள் எல்லா மனுஷருக்கும் பொதுவாக இருக்கும். உங்களது தாலந்துகள், வரங்கள், வாஞ்சைகள் இவற்றையே கர்த்தர் உங்களது வாழ்வின் வழியாகப் பயன்படுத்துகிறார். இவற்றை கர்த்தருடைய வார்த்தை வெளிச்சம் தந்து காண்பிக்கும். மற்றவர்கள் உங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள், எப்படி உங்களைப் பார்க்கிறார்கள் என்பதைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். தேவனுடைய அன்பிலே நடவுங்கள். உங்களது தாலந்துகள், வரங்கள், வாஞ்சைகளைக் கர்த்தரிடத்தில் அர்ப்பணியுங்கள். உங்களுக்கு, உங்களைக் குறித்தத் தமது தரிசனங்களைத் தந்து அதை நிறைவேற்றும்படியான சூழ்நிலைகளை உருவாக்கித் தருவார்.

❑ ❑ ❑

# நீங்களும் தீர்க்கதரிசனம் சொல்லலாம்

- பால்ராஜ் கென்னடி

தேவன் தமது ஆவியினால் நம்மை அபிஷேகிக்கிறார். அவருடைய ஞானம், அறிவு, புத்தியினால் நம்மை நிரப்புகிறார். மனுஷன், தனக்குள்ளே இருக்கும் காரியங்களை அறிந்து கொள்வதற்காகக் கர்த்தர், அவனுக்குள்ளாக ஒரு ஆவியை வைத்திருக்கிறார். இந்த ஆவியினால்தான் நாம் நமக்குள்ளே இருக்கும் காரியங்களையெல்லாம் ஆராய்ந்து பார்க்கிறோம்.

> மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்துபார்க்கும்.
>
> -நீதிமொழிகள் 20: 27

இது எப்படியென்றால், ஒரு இருட்டறையில் மெழுகுவர்த்தியை நம் கையில் பிடித்துக்கொண்டு செல்லும்போது, எப்படி வெளிச்சம் படபட ஒவ்வொன்றையும் நாம் காண்போமோ அப்படிப்போல.

நம்முடைய ஆவியினாலே நம் உள்ளத்திலுள்ள காரியங்களை அறிந்துகொள்வதுபோல, தேவனுடைய சிந்தையை அறிந்துகொள்ள, தேவனுடைய ஆவியினால் மாத்திரமே முடியும். ஆகவேதான் அவருடைய பரிசுத்த ஆவியினால் நம்மை நிரப்புகிறார்.

பரிசுத்த ஆவியானவர், மனுஷனுடைய ஆவியினால், ஞானத்தினால் அறிந்துகொள்ள முடியாதக் காரியங்களை மனுஷனுக்கு புரிந்து கொள்ளும் படியாக விளக்கிச் சொல்வார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார்:

> என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.
>
> -யோவான் 14: 26

நம்மை உண்டாக்கின தேவன், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இயேசுகிறிஸ்து என்னும் ஒரு மனுஷனாய் இந்த பூமிக்கு வந்தார். இப்போது பரிசுத்த ஆவியானவராக நம் ஒவ்வொருத்தருக்குள்ளும் இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் புதிதாக எதையும் நமக்கு போதிப்பதில்லை. இயேசு கிறிஸ்துவாய் இருந்து எதையெல்லாம் பேசினாரோ, போதித்தாரோ,



அவற்றையெல்லாம் நமக்கு ஞாபகத்துக்கு கொண்டுவருவார்.

இப்போது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கிறார். நமக்குள்ளே அவர் பேசுகிறார். இதை எப்படி அறிந்துகொள்வது? ஆவியானவர்தான் பேசுகிறாரா? அல்லது நமக்குள்ளே தோன்றும் எண்ணங்களா? இதை அறிந்து கொள்ளவே தேவன், முதலாவது நமக்கு ஆவிகளை பகுத்தறியும் வரத்தை *(1 கொரிந்தியர் 12:10)* கொடுக்கிறார். இந்த வரத்தினால் ஆவிகளை நாம் கண்டு, இன்ன ஆவி என்பதை அறிந்துகொள்ளலாம். நமது ஆவி, மற்ற மனிதர்களுடைய ஆவி, தேவனுடைய பரிசுத்த ஆவி, சாத்தானுடைய ஆவி இப்படி நாம் பகுத்து உணரலாம்.

இப்போது நாம் காரியத்துக்கு வருவோம். நம் வாழ்க்கையில் இப்போது என்ன நடந்துகொண்டிருக்கின்றது? நாம் சரியான பாதையில் செல்கிறோமா? எதை நோக்கி சென்றுகொண்டிருக்கிறோம்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலை எப்படி பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெற்றுக்கொள்வது?

இந்தக் கேள்விகளையெல்லாம் நாம் ஜெபத்திலே கர்த்தரிடம் கேட்கிறோம். இப்போது உள்ளத்திலே நமக்கு 'பளிச்' சென்று பதில் தோன்றுகிறது என்று வைத்துக்கொள்வோம். அது நம்முடைய பிரமையா அல்லது கர்த்தருடைய ஆவியானவரின் உணர்த்துதலா? அல்லது சாத்தானுடைய குரலா? ஆவிகளைப் பகுத்தறியும் வரம் இருந்தாலும் அது செயல்பட வேதத்தின் வார்த்தை அவசியம்.

பரிசுத்த ஆவியானவர், வேதத்திலிருந்து கர்த்தருடைய வார்த்தைகளை எடுத்து அதன்படியே பேசுவார். அது தேவனை மகிமைப்படுத்துவதாக இருக்கும். நம்மை பெருமைகொள்ள வைப்பதாக இருக்காது *(எரேமியா 23:16)*. நம்மை கர்த்தரண்டை மனந்திரும்பச் செய்வதாக இருக்கும் *(2 இராஜாக்கள் 17:13-18, யோனா 3:10)*

தேவனுடைய மனதுருக்கத்தை வெளிப்படுத்துவதாக இருக்கும் *(யோனா 4 :10-11, எரேமியா 31:20)* ஆவியானவர் நமக்கு எதை உணர்த்தினாலும், அது வேதத்தின் வார்த்தையை வைத்தே இருக்கும். அதனால் கர்த்தருடைய ஆவியானவரின் அந்த உணர்த்துதலை நாம் துல்லியமாக அறிய வேண்டுமானால், நாம் வேதத்தை நன்றாக படிக்கவேண்டும்.

வேதத்திலே, ஆபிரகாம், நோவா, மோசே, யோசேப்பு, தாவீது, தானியேல், பவுல் போன்ற தேவ மனிதர்களைப் பற்றி உள்ளது. என்னைப்பற்றி இல்லையே என்று நீங்கள் கேட்கலாம். மோசேயின் தேவன்தான் உங்கள் தேவன். மோசேயிடம் கர்த்தர் என்ன சொல்கிறார் என்று பாருங்கள்:

> பின்னர் அவர்: நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார்.
>
> - யாத்திராகமம் 3:6

தேவன் இந்த இடத்திலே மோசேயிடம் பேசினதிலே பல காரியங்கள் இருக்கின்றது. நமக்கு தேவையானது ஒன்றே. அது என்னவென்றால், தேவன், ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் எப்படி கூட இருந்து, ஆசீர்வதித்து, வழிநடத்தினாரோ அப்படியே மோசேயோடும் கூட இருந்து நடத்துவதாகச் சொல்கிறார்.

- தொடரும்